# வட இலங்கையில் டச்சுக்காரர்கால (1658 - 1796) பனை உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள்

**- சில அவதானிப்புக்கள் -**

கந்தையா அருந்தவராஜா

**ஆய்வுச்சுருக்கம்**

வடஇலங்கையினது பொருளாதாரத்தில் அதனது பிரதான வருமான மூலங்களிலொன்றாக புராதன காலந் தொடக்கம் ஏறத்தாழ நாடு சுதந்திரமடைந்ததன் பின்னராகவும் பனை மரமும் அது சார்ந்த பண்டங்களும் அமைந்திருந்தன. வறுமை, உணவுப் பஞ்சம் என்பன ஏற்பட்ட காலங்களில் வடஇலங்கை மக்களுக்குக் கற்பகதருவாக இருந்து அவர்களது பட்டினி வாழ்வினை அகற்றியது. நோயாளருக்கு மருந்தாகியது. ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலும் பின்வந்த ஐரோப்பியர்களுக்கும் பிரதான வர்த்தகப் பொருட்களாக இருந்து அவர்களுக்கு வருவாயினைப் பெற்றுக் கொடுத்தது. பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியது. உள்நாட்டில் மட்டுமன்றி அக்காலப்பகுதிகளில் அயல்நாடுகளிலும் இத்தகைய பொருட்களுக்குப் பெரும் கிராக்கியிருந்தது. அவ்வகையில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தின் பின்னதாக இத்தகைய பனைமரத்தினது பெறுமதியினை உணர்ந்தவர்களில் ஐரோப்பியர்களான டச்சுக்காரர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் இலங்கையின் கரையோரப்பகுதிகளை நிர்வாகம் செய்த காலப்பகுதியில் பனை மரத்தினை வடஇலங்கையில் உருவாக்குவதில் அக்கறை உடையவர்களாக இருந்ததுடன் இவற்றிலிருந்து அதிகளவான வருவாயினைப் பெற்றனர். இவர்களது காலத்தில் வடஇலங்கையினது நிர்வாகத்தினைத் திறம்பட நடாத்துவதற்குத் தேவையான பொருளாதார பலத்தினைக் கொடுத்த காரணிகளில் பனையும் ஒன்று குறிப்பிடத்தக்கது. ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தில் பனையிலிருந்து அதனது உற்பத்தி மூலமாக அவர்கள் பயன் அடைந்தார்கள். போர்த்துக்கேயரது காலத்தில் அவர்கள் பிற வர்த்தகப் பொருட்களில் காட்டிய அக்கறையினை பனம் பொருட்களில் காட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் டச்சுக்காரரோ பனை முழுவதிலிருந்தும் ஆதாயத்தினை அடைந்தனர். அவர்களது காலத்தில் உள்நாட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்தது மட்டுமன்றிச் சர்வதேச சந்தைகளுக்கும் பனையும் அது சார்ந்த பொருட்களும் அனுப்பப்பட்டன. பின்வந்த ஆங்கிலேயரும் டச்சுக்காரரது பனைமரம் தொடர்பான கொள்கையினைத் தொடர்ந்து சிலகாலம் கைக்கொண்டனர். இக்காலங்கள் ஒவ்வொன்றிலும் மக்கள் பனை மரத்தின் மூலமாக நன்மை அடைந்தனர். அரசும் மக்களுடன் இணைந்து முன்னொருபோதும் இல்லாத வகையில் அதிகளவிற்குப் பனை வளத்தின் மூலம் பனை மரத்தின் மூலம்பயன் பெற்றதென்றால் அது வடஇலங்கையில் டச்சுக்காரரது காலத்திலேதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடஇலங்கையில் டச்சுக்காரரது பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக வரலாற்றாளர்களும், பொருளியலாளர்களும், அறிஞர்களும் ஓரளவு விரிவாக ஆய்வினைச் செய்தபோதும் தனித்து மேற்கூறப்பட்ட இவ்விடயமாக வரலாற்று நோக்கில் இதுவரை எவரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. அத்துடன் அக்காலப்பகுதியில் பனை மரமும் அது சார்ந்த பண்டங்களும் பெற்றிருந்த முக்கியத்துவத்தினைத் தற்போதைய சமூகத்தவருக்கு எடுத்துக்காட்டுதல் மற்றும் இவ்விடயமாக எதிர்காலத்தில் ஆய்வினை மேற்கொள்ள விரும்புகின்றவர்களுக்கு முன்னோடியான ஆய்வாக அமைய வேண்டுமென்பதும் கட்டுரையினது பிரதான நோக்கங்களாக உள்ளது. பெருமளவிற்கு வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வினது தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களில் டச்சு ஆளுநர்களது அறிக்கைகள் பிரதான

இடத்தினைப் பெற்றுள்ளன. பிற்பட்ட காலங்களில் முதந்தர ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள் என்பன இரண்டாந்தர ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய ஆதாரங்களை அடிப்படையாக வைத்து நோக்குகின்ற போது அக்கால வடஇலங்கையினது பொருளாதாரத்தின் உயிர்நாடியாகப் பனையும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களும் விளங்கியதனை அறியலாம்.

**திறவுச் சொற்கள் :** கற்பகதரு, பனைமர ஏற்றுமதி, சுதேச வளம், ஆரியச்சக்கரவர்த்திகள், டச்சுக்காரர்.

**1. அறிமுகம்**

டச்சுக்காரரைப் பொறுத்தவரை அவர்கள் பொருளாதாரத்தில் சிக்கனத்தினைத் தமது நோக்கங்களிலொன்றாகக் கொண்டவர்கள். இதன் பொருட்டு அவர்கள் உள்நாட்டில் கிடைக்கின்ற மூலவளங்களிலிருந்து உச்சப் பயன்பாட்டினைப் பெற வேண்டுமென்ற சிந்தனையினை உள்வாங்கியிருந்தனர். இதற்கு ஏற்றவகையில் இப்பகுதிகளில் அவர்களுக்குப் பனை மரமும் அது சார்ந்த பண்டங்களும் தாராளமாகக் கிடைத்தன. அவ்வகையில் வடஇலங்கையினது பொருளாதாரத்தில் நீண்டகாலத்திலிருந்தே பனை மரமும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களும் பிரதான இடத்தினைப் பெற்று வந்துள்ளதை ஆதாரங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அதாவது வடஇலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்திற்கும் சற்று முன்னதாக ஆரம்பித்து ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலும், தொடர்ந்து வந்த ஐரோப்பியர் களது காலங்களிலும், சுதந்திரத்தின் பின்னராகவும் பல்வேறு வழிகளில் வடஇலங்கையினது பொருளாதாரத்தில் இவை செல்வாக்கினைச் செலுத்தியிருந்தன. இப்பின்னணியிலேதான் டச்சுக்காரரது காலத்திலும் வடஇலங்கையில் அவர்களது பிரதான வருமான மூலங்களிலொன்றாக இவை அமைந்திருந்தன.

இவர்கள் இவற்றினது உற்பத்தியினைப் பெருக்குவதற்கும் வருவாயினை அதிகரிக்கவும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக அவர்களது வருவாய் அதிகரித்த அதேநேரத்தில் வடஇலங்கை மக்களும் பல்வேறு வழிகளில் இவற்றினூடாகப் பயன்களைப் பெற்றனர். அவ்வகையில் இப்பகுதி மக்கள் இவற்றினை உள்நாட்டின் பல பகுதிகளுக்கும் கடல் வழியாகவும்தரைவழியாகவும்கொண்டுசென்று விற்பனை செய்ததுடன் தமக்குத் தேவையான பண்டங்களையும் பதிலுக்குப் பெற்று வந்தனர். தென்னிந்தியத் துறைமுகங்களுக்குத் தனியாகவும் தரகர்கள் மூலமாகவும் ஏற்றுமதியினைச் செய்து, தட்டுப்பாடான காலங்களில் அரிசி, ஆடை உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்களைத் தருவித்தனர். (Arasaratnam S. 1988) அக்காலப்பகுதியில் இந்தியாவிலும் நாட்டின் கிழக்கு மற்றும் தென்னிலங்கை பல பகுதிகளிலும் இவற்றுக்கு நல்ல கிராக்கி இருந்தது. டச்சுக்கா ரரது ஆட்சியானது வடஇலங்கையில் செல்வாக் கினை இழந்த பின்னரும்கூட பனை மரத்தினது முக்கியத்துவமானது இப்பகுதிகளில் குறையவில்லை. அதாவது ஆங்கிலேயரது காலத்திலும் இம்மரத்துடன் தொடர்பான பொருட்களைப் பயன்படுத்திப் பல்வேறு உற்பத்திகளைச் செய்கின்ற தொழிற்சாலைகள் வட இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் தமிழ் மக்களது வாழ்வியலோடு இணைந்துள்ள இம்மரத்தினை பஞ்சம் போக்கி எனவும் அழைப்பதில் தவறில்லை.

**தோற்றந் தொடர்பான கருத்துக்கள்**

வடஇலங்கையில் பனை மரத்தினது தோற்ற காலத்தினைச் சரியாகக் கணிப்பிட

முடியாதுவிட்டாலும்கூடப் பொதுவாக இவற்றினது தோற்ற காலமானது தென்னிந்தியாவில் சங்ககாலத்திற்கும் முற்பட்டதாக எம்மால் அக்காலப்பகுதிக்குரிய இலக்கியங்களின் மூலமாக அறியமுடிகின்றது வடஇலங்கையில் இதனது தோற்றமானது பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய காலத்துடன் அடையாளங் காணப்படுகின்றது. அதாவது வடஇலங்கையில் கி.மு எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இதனது தோற்ற காலம் இருந்திருக்க வேண்டும். பின்னர் தென்னிந்தியாவில் பல்லவரது செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில் தென்னிந்தியத் தொடர் பின் பின்னணியில் பனை மரத்தினதும் அது சார்ந்த பண்டங்களுக்குமான தேவையானது வடஇலங்கையில் அதிகரித்தது. சோழப் பேரரசு, விஜயநகர பேரரசு போன்ற கால கட்டங்களில் கேள்வியும் பனை மரத்தினதும் அவற்றின் கேள்வியும் உற்பத்திகளின் பயன்பாடும் அதிகரித்து வந்திருந்தமைக்கான புறச்சான்றுகளும் கிடைத்துள்ளன.

வடஇலங்கை மக்களது பரம்பரைச் சொத்தான பனை மரமானது பல்வேறு பயன்களை மக்களுக்கு வழங்குவதனால் அது கற்பகதரு எனப் பொதுவாக எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. பனை மரத்தினைப் போன்று வேறு எந்தவொரு தாவர இனத்தின் சகலபாகங்களும் மக்களுக்குப்பிரயோசனமாக அமைவதில்லை. எக்காலத்திலும் எவருக்கும் கைகொடுப்பது இது. பனை மரத்தின் பயன்பாடு எப்போதிருந்து முதன் முதலாக உருவாகியதென்பது சரிவரத் தெரியாவிட்டாலும்கூட இவற்றினது பரவலானது அதிகளவில் ஆசிய நாடுகளில்தான் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இலங்கை, இந்தியா, மலேசியா, கம்பூச்சியா, இந்தோனேசியா, மியன்மார், தாய்லாந்து, வியட்னாம், சீனா, மேற்கு ஆபிரிக்க நாடான கொங்கோ மற்றும் மாலி, நைஜீரியா, தன்சானியா போன்ற பகுதிகளிலும் இவை அதிகளவில் உற்பத்தியாகியுள்ளது (Blatter, E.S.J.1926). இலங்கையைப் பொறுத்த வரையில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பகுதிகள், வன்னிப்பகுதிகள், கிழக்கிலங்கையின் சில பகுதிகள் எனத் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் வாழுகின்ற பகுதிகளிலேதான் பனை மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வாறு இவை தேசத்தின் பல பகுதிகளிலும் இருப்பினும் தருகின்ற பயன்பாட்டில் சுவைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட இயல்புகள் கொண்டு காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பனை மரமானது வறண்ட பிரதேசங்களில், வளரக்கூடியதொரு மரமாகும். இது மரம் போன்றதொரு அமைப்பிலே தெரிந்தாலும் கூட உண்மையில் ஒரு புல்லினத்தினைச் சார்ந்த தாவர இனமாகவேகருதப்படுகின்றது. அதனால் இது தானாகவே வளருகின்ற இயல்பினை உடையது. இதனது சிறிய தோற்றமானது வடலி என்ற பெயரினால் அழைக்கப்படுகின்றது. ஒரு பனையானது முதிர்ச்சியடைய ஏறத்தாழ இருபது வருடங்களாவது செல்லும் (கணபதிப் பிள்ளை, க. 1962) இதனது வயதானது மனிதர்களுடைய சராசரி வயதிலும் பார்க்க அதிகமானதென்பது கவனிக்கத்தக்கது. பனை மரங்கள் குறிப்பிடத்தக்க வளைவுகள் எவையுமின்றி சுமார் 30 மீற்றர்கள் வரை வளருகின்ற இயல்பினை உடையதாகும். கிளைகள் இவற்றுக்குக் கிடையாது. உச்சிப் பகுதியில் ஏறத்தாழ 3 - 4 மீற்றர்கள் வரை விசிறி வடிவமான ஓலைகள் வட்ட வடிவத்தில் காணப்படுவது இதனது சிறப்பாகும்.

வடஇலங்கை மண் பெற்றுள்ள இயற்கைச் செல்வங்களுள் பனைச் செல்வமானது சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. அராபிய நாட்டவர்களுக்கு எப்படிப் பேரீச்சம்பழம் பயன் அளிக்கின்ற பயிராக இருக்கின்றதோ அவ்வாறே வடஇலங்கை மக்களுக்கும் பனையும் அதனோடு தொடர்புபட்ட பொருட்களும் பயனளிக்

கின்றன. பெண்ணை, தாலம், தாளி, தாளிப்புல், கற்பகதரு, ஏடகம், துருமேகம், நீலம், பாரி பத்திரம், காமபுரம், தரும விசாரன், கரும்புறம், போந்து, புல்லூதிபம், போந்தை, புற்பதி, போன்ற பல்வேறு பெயர்களினால் பனைமரம் அழைக்கப்படுகின்றது. பனை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழியானது தமிழ் மக்களினால் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (குலரத்தினம், கா,சி.1977).

உணவுப் பொருட்களாகவும் சிறு கைத்தொழிற் பொருட்களாகவும் பயன் படுகின்ற அதேவேளை பனை மரத்தினது பாகங்கள் மருத்துவ குணங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. பனம் பழம், பனம் விதை என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. இயற்கை மருத்துவத்தில் வழங்கப்படுகின்ற மருந்து வகைகளைக் குறிப்பாக உள்ளெடுக்கின்ற மருந்துகளைப் பால், தேன், நீர், முலைப்பால், வெற்றிலைச்சாறு, பனையினது வெல்லம் போன்ற அனுமானப் பொருட்களுடன் சேர்த்து உள்ளெடுப்பது தற்காலம் வரை வடஇலங்கையில் இருந்து வருகின்றது (விசாக ரூபன், கி.2004) மேலும் சில இடங்களில் புற்றுநோய்க்கான மருந்துகளிலொன்றாகப் பனங்கற்கண்டானது ஏலக்காய், கரட் என்பவற்றினது சாற்றுடன் சேர்த்துப் பயன் படுத்தப்படுகின்றமையும் நோக்கத்தக்கது (Sankaralingam,L.1999). மேலும் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், உடல் சூட்டினைக் குறைத் தல், மலச்சிக்கலைத் தடுத்தல் போன்ற பல மருத்துவக் குணங்களும் இதற்கு உள்ளது.

இத்தகைய மகத்துவமான பனை மரத் தினது தோற்ற காலந் தொடர்பாக அறிஞர் களிடையிலே முரண்பட்ட கருத்துக் கள் காணப்படுகின்றன. இத்தகைய கருத்துக்கள் எவையும் அதனது தோற்ற காலத்தினையோ அல்லது அவை எங்கு முதலில் தோன் றின என்பது பற்றியோ உறுதியான கருத் துக்களாக அமையவில்லை. பனை மரத்தி னது வரலாற்றினை ஆராய்ந்த தாவர விய லாளர்களும் வரலாற்றாசிரியர்களும் இதனது தோற்ற காலத்தினைக் கணிப்பிட்டுக் கூறமுடியாத அளவிற்கு இம்மரத்தினை மிகவும் தொன்மையானதாக அவர்கள் கருதுகின்றனர். அவர்களில் சிலர் இம்மர மானது முதலில் ஆபிரிக்காவிலேதான் தோன்றியதாகவும் பின்னர்தான் ஆசிய நாடுகளுக்கும் பரவியதாகக் கூறுவர் (பாக்கிய நாதன்,மு.2003). ஆபிரிக்காவிலிருந்து இம்மரமானது இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தாலும் பின்னர் அங்கிருந்துதான் இலங்கை உட்பட பிற ஆசிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். காரணம் பண்பாட்டுப் பரவலென்பது இந்தியாவிலி ருந்துதான் இலங்கைக்கு பரவியதாக வர லாற்றில் சில கருத்துக்கள் உள்ளன. இதனை மறுப்பவர்கள் சிலரும் உளர். 1979 இல் லியூபெயிற் என்பவர் பனை யினை இந்தியாவிற்கே உரிய மூலமான தாவரமாக அடையாளங் காணுகின்றார். மகாராஸ்டிர மாநிலப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த அறிஞரான மகாபல் என்பவர் பனை மரத் தினது பாகங்களை உள்ளடக்கிய சுவடுகளை ஆய்வுசெய்து இது பல மில்லியன் வருடங் களுக்கு முற்பட்டதாகக் குறிப்பிடுகின் றார் (சம்பந்தம்,கே., 1966).

பனை மரமானது வடஇலங்கையின் சுதேச வளங்களிலொன்றாகப் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்துடன்தான் முதன் முதலாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தாங்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களைச் சூளையிலிட்டு சுடுவதற்கு இம்மரத்தினது பாகங்களையே விறகாகப் பயன்படுத்தியதாக செ. கிருஸ்ணராசா கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தியஎரிந்தநிலையில்காணப்பட்ட அப்பாகத்தினது சுவட்டு எச்சத்தினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடுகின்றார்.

(கிருஸ்ணராசா, செ.2004, ப.29) அதாவது கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சியின் விளைவாக பெருங்கற் காலத்திற்குரிய அடிமண்படை அடுக்கிலிருந்து புராதனை சூளை வைத்த மையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்காலத்திற்குரிய பண்பாட்டு மக்கள் சமகாலத்தில் ஆனைக் கோட்டையிலும், புத்தளம் போன்ற பகுதிகளி லும் வாழ்ந்திருப்பதனால் அப்பகுதிகளிலும் பனை மரத்தினது பயன்பாட்டினை நன்கு அறிந்திருந்தனர்எனக்கொள்ளலாம். தற்போதும் இப்பகுதி களில் பனை மரங்கள் செறிவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இம் மட்பாண்டச் சாதனங்கள் கிடைக்கின்ற நிலையம் கந்தரோடையில் புராதனைச் சூளை வைத்த மையம் என்பது மேலாய்வுகளின் மூலம் உறுதியாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. "இம் மட்பாண்டச் சூளைக்கு பிரதான எரிபொருளாக பனை மரமே அக் காலத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதனை அச் சூளையில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட கட்டி யாகிப் போன பனஞ் சிராயின் சாம்பற் சுவடுகள் சான்றாதாரம் ஆகின்றது. பெருங்கற்கால யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் தமத பிரதான எரிபொருளாக பனை மரத்தினையே பயன்படுத்தி இருந்தனர் என்ற செய்தியை இந்த ஆய்வுக் கிடங்கு மூலம் கண்டறியப்பட்டது" (கிருஸ்ணராசா., 2004 : 29). இலங்கையில் இத்தகைய பெருங்கற்காலப் பண்பாடானது கி.மு. எட்டாம் நூற்றாண்டாகவும் தென்னிந்தியாவில் இக்காலமானது கி.மு. பத்தாம் நூற்றாண்டாகவும் அடையாளங் காணப்பட்டுள்ளது. இதனால் பனை மரத்தினது செல்வாக்கானது கி.மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே வடஇலங்கையில் இருந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அவ்வாறே பனை மரமானது தென்னிந்தியப் பண்பாட்டுப் பரவலுடன் கூடவே வட இலங்கைக்கு வந்திருக்கலாமென்ற கருத்தும் ஏற்கத்தக்கது.

இலங்கையின் வரலாற்றினை எடுத்துக் காட்டுகின்ற வரலாற்று நூல்களிலொன் றான மகாவம்சத்தில் பனை தொடர்பான குறிப்புக்கள் சில இடங்களில் காணப் படுகின்றன (மகாவம்சம், அத்.10,17, செய். 89,44). அப்படியாயின் மகாவம்சத்தினது தோற்ற காலத்திற்கு முன்னதாகவே (கி.பி. 06) பனையினைப் பற்றி சுழற்த்தவர் அறிந்திருந்தமை இதிலிருந்து தெளிவாகின்றது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்ட குறிப்புக்கள் பனை ஓலையிலேதான் எழுதப்பட்டிருந்தன. வரலாற்று ஆராச்சி யாளர்கள் பலரும் ஓலைச்சுவடியினது பயன் பாடானது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டி லிருந்தே வழக்கிலிருந்ததாகக் கூறுவர். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்ன ராகக் குறிப்புக்களை எழுதுவதற்கு இந்தியாவிலிருந்து தென்கிழக்காசிய நாடு களுக்குப் பனை மரத்தினை எடுத்துச் சென்ற மைக்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. வடஇலங்கைக்கு வெளியே சங்ககாலத் தேய தமிழ் இலக்கியங்களில் பனை தொடர்பான குறிப்புக்கள் பல இடங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக புறநானூறு மற்றும் நெடுநல்வாடையினைக் குறிப்பிடலாம். இன்னும் தேவாரங்கள், சிற்றிலக்கியங்கள், காவியங்கள் என்பவற்றிலும்கூடப் பனை மரந்தொடர்பான குறிப்புக்களைக் காணலாம் (சிவலிங்கராஜா, எஸ். 2014). அவற்றின் பல இடங்களில் பாண்டிய நாடானது பனைக்குப் புகழ் பெற்றிருந்ததனை இனங்காண முடிகின்றது. மூவேந்தருள் சேர மன்னரும் வீரர்களில் பலராமரும் ஞானியருள் பீஷ்மரும் பனையினை மதித்து அற்றினை மாலையாகவும் கொடியாகவும் வைத்திருந்தமை பற்றி அக்கால இலக்கியங்கள் ஊடாக அறியலாம் (குலரத்தினம், கா, சி. 1977). மேலும் மன்னர்களது தசாங்களில்கூட பனையானது சிறப்புடன் விளங்கியிருந்தமையினைக்

காணலாம். திருக்குறளிலும் பனை தொடர்பான குறிப்புக்கள் முப்பாலிலும் உள்ளன (குறள்கள்,104,433,1282).

பல்லவர் காலத்திலிருந்து (கி.பி. 6) பனை மரமானது தமிழக மக்களது பண்பாட்டுக் கூறுகளிலொன்றாக இருந்து வந்ததனை அவதானிக்க முடிகின்ற அதேநேரத்தில் இக்காலப்பகுதியிலிருந்துதான் மீளவும் வட இலங்கையிலும் இதனது முக்கியத்து வமானது அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண்கள் அணிகின்ற தோட்டினைக் காதோலைஎன்றழைக்கின்றவழக்கமானது இரு தேசங்களிலும் இக் காலப் பகுதியிலிருந்துதான் புகழ்பெற ஆரம்பிக்கின்றது. பனம்பொருட்கள் இரு தேசங்களுக்கிடையிலும் பரிமாறப்பட்டிருந்தன. தொடர்ந்துவந்த சோழருடைய காலத்திலிருந்து வட இலங் கையிலிருந்து உற்பத்தி செய்யப் பட்டபனம் பொருட்களை தமிழகம் பெற்ற வரலாறு பற்றிய தகவலை தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டில் காணலாம் (நாகசாமி, இரா.ப.ஆ. 1969). சோழரது வணிககணங்கள் இவ்விடயமாக முக்கியத்துவம் பெற்றிருந்தன (Gunasinhe,P.A. 2007).

திருஞானசம்பந்தருடைய காலத்தில் பனந்தோப்புக்கள் தனித்தோட்டங்களாக மிளிர்ந்தன. திருமூலர் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் பனையின் சிறப்பினைப் பாடியுள்ளார். பெரும்பாலான நாயன்மார்களது வாழ்வுக்காலமானது பல்லவர், சோழரது காலப்பகுதிகளுக்குள் உட்பட்டிருப்பதனாலும் அவர்களது பதிகங்களில் பனை பற்றிய குறிப்புக்கள் இருப்பதனாலும், இரு நாடுகளும் தொடர்புகள் நீண்டகாலமாக வைத்திருந்தமையின் பின்னணியிலும் இவர்களது காலங்களில் வடஇலங்கையில் பனை ஆதரிக்கப்பட்டு இவர்களால் அது போற்றப்பட்டிருக்கலாம். ஆனால்குறிப்புக்கள் இது பற்றியதாகக் கிடைக்கவில்லை. அது மட்டுமன்றிகி.பி. பன்னிரெண்டாம்நூற்றாண்டளவில் சோழர்களது செல்வாக்கானது தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட சமயத்தில் அங்கு பனை மரக்கலாசாரம் அவர்களினால்தான் பரப்பப்பட்டிருக்க வேண்டும். உணவுத் தேவைக்காகவும் சுவடி எழுதுவதற்காகவும் அங்கே இவை கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். விஜயநகரப் பேரரசு காலத்திலும் வடஇலங்கையிலிருந்து பனம் பொருட்கள் தென்னிந்தியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

ஆரியச்சக்கரவர்த்திகளது அரசு நிலவிய காலத்தில் உள்நாட்டவரது தேவைகளுக்கு மட்டுமன்றி நாட்டின் பிற பகுதிகளுக்கும் ஏன் தென்னிந்தியாவினுடைய தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற நோக்குடன் பனம் பண்டங்கள் வட இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டன. அக்காலப்பகுதியில் இவை மக்களது அன்றாட வாழ்வில் குறைந்தது ஒருநேர உணவுத் தேவையினையாவது பூர்த்தி செய்கின்ற வகையில் காணப்பட்டது. பனங்களியாகவும் பனாட்டு, பணியாரம் போன்ற உணவுப் பொருட்களாகவும் இவை மக்களது தேவையினை நிறைவு செய்தன. பனை மரமும் பனம் பொருட்களும் மக்களது வாழ்விற்கு ஆதாரமாக விளங்கியதன் பின்னணியில் வடஇலங்கையில் இது சார்ந்த பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. பனை மரத்தினது பாகங்களைப் பயன்படுத்திக் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டுப் பலர் வருவாயினைப் பெற்றனர் (Arasaratnam, S. 1982). அத்துடன் அக்காலப்பகுதியில் பனை மரத்தினைத் துலாவாகப் பாவித்து விவசாயத்திற்குத் தேவையான நீரினை வடஇலங்கை மக்கள் பெற்றனரென்பதும் குறிப்பிடத்தக்கது (பத்மநாதன், சி.2011).

போர்த்துக்கேயரைப் பொறுத்தவரை அவர்கள் வடஇலங்கையில் தமது நிர்வாகத்தினை நேரடியாக ஏறத்தாழ அரை

நூற்றாண்டு காலமே ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் டச்சுக்காரரது செல்வாக்கானது வடஇலங்கையில் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகாலம் நீடித்திருந்தது (Silva, K.M.De. 1981). ஆங்கிலேயர் அதற்கு அப்பால் சென்று நாடு முழுவதனையும் சொந்தமாக்கிச் சென்றனர். இவர்கள் மூவரதும் முக்கியமான நோக்கமானது நாட்டினது பொருளாதாரத்தினைச் சுரண்டுவதே. இவர்களில் முன்னிருவரும் பின்வந்தவரைவிட இவ்விடயமாக வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் பல பகுதிகளிலும் மக்கள் மீது மோசமான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். போர்த்துக்கேயரைப் பொறுத்தவரைஅவர்கள் தமது காலத்தின் பெரும் பகுதியினைப் போர்களிலே செலவழிப்பவர்களாவே காணப்பட்டனர். குறிப்பாகக் கண்டியைக் கைப்பற்றுவதற்கான போர்களில் தமது காலத்தினை வீணடித்து வந்தனர். இதனால் அவர்களால் வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் கரையோரங்களில் திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கையொன்றினைப் பின்பற்ற முடிய வில்லை. அவர்கள் கிடைத்ததனைச் சுருட்டிக் கொண்டனர். டச்சுக்காரரைப் பொறுத்தவரை அவர்கள் போரினைக் குறைத்துச் சமாதானத் தினை ஏற்படுத்துவதன் மூலமாகவே பொருளா தார பலத்தினைப் பெருக்கலாமென்ற சிந்தனை யினைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

போர்த்துக்கேயரது காலத்தில் வட இலங்கையில் ஏற்கனவே நடைமுறையி லிருந்துவந்த பொருளாதாரக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க அளவில் அவர்கள் மாற்றங்கள் எவற்றினையும் ஏற்படுத்தவில்லை. அவர்களது செல்வாக்கு இப்பகுதிகளில் குறைந்தளவு காலமே காணப்பட்டதன் பின்னணியில் அப்பகுதிகளில் மாற்றங்கள் எவற்றினையும் துணிந்து மேற்கொள்ளவில்லை. இதனால் பனம் பொருட்களின் உற்பத்தியும் அவற்றினது பாவனையும் வர்த்தகமும் சுதேச மக்களது கைகளிலேதான் காணப்பட்டன. பிறவிடயங் களில் குறிப்பாக முத்து வர்த்தகம், யானை வர்த்தகம் போன்றவற்றில் தலையிட்ட இவர்கள் பனம் பொருட்களது அருமையினை உணராதவர்களாகவே காணப்பட்டனர். (சிவசாமி,வி. 2014) அதனால் அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாயினையும் பெரு மளவிற்கு கவனிக்கவில்லையென்றே கூறவேண்டும். இருப்பினும் இவர்கள் தமது ஆட்சிக்காலத்தின் இறுதியில் இவற்றின் மூ லமாகக்கிடைக்கக்கூடியவருவாயினை உணரத் தவறவில்லையென்பதும் கவனிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக அம்புறோசியோ டீ பிறிட்டேய்ஸ் டீ காமரா தனது காலத்தில் தமிழ் பிரதேசங்களில் கிடைக்கின்ற வருமானத்தினை அதிகரிக்கின்ற நோக்கத்துடன் புதிய வரி களை அறவிடுவதற்கான முயற்சிகளில் இறங்கினார். இப்பின்னணியில் தோம்புவின் மூலமாக வடஇலங்கையிலுள்ள பனைகளது எண்ணிக்கையினைத் தெரிந்ததுடன் அவற்றுக்குப் புதிய வரிகளை விதித்ததன் ஊடாக அரசினது வருமானத்தினையும் அதிகரித்திருந்தார் (ANTT, Liv. *26.f.291*/ Gunasingam,M. 2008).

**வடஇலங்கையில் டச்சுக்காரர்**

ஸ்பெயினிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்ற டச்சுக்காரர் காலப்போக்கில் கைத் தொழில் மற்றும் வர்த்தகத்துறைகளில் முன்னேற்றங்கண்டனர். தொடர்ந்து பட்டேவியாவினைத் தங்களது கீழைத்தேய நாடுகளது தலைமையகமாக மாற்றிக்கொண்ட இவர்கள் நமது நாட்டில் காணப்பட்ட கறுவாவினால் கவரப்பட்டவர்களாக இலங்கை வந்தனர். தென்னிந்தியத் துறைமுகங் களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்ப தன் மூலமாகத் தங்களது ஆதிக்கச் செயற்பாடு களை விஸ்திரிக்கலாமென்ற எண்ணமும் அவர்களிடமிருந்தது. அதுவும்கூட இலங் கையின் மீது இவர்கள் கவனத்தினைச் செலுத்து வதற்கான காரணங்களிலொன் றாகவும்

அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது (Pieries, P.E. 1941). அவ்வகையில் *1602* இல் முதன் முதலாக இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திய இவர்களுக்கு இரண்டாம் இராஜசிங்கனது அனுசரணை இருந்தது. தொடர்ந்து படிப்படியாக இலங்கையின் அரசியலில் தலையிட ஆரம்பித்த இவர்கள் அச்சமயத்தில் இலங்கையின் கரையோரங்களில் செல்வாக்கினைச் செலுத்திவந்த போர்த்துக் கேயரைத் தோற்கடித்துவிட்டு *1658* இல் இலங்கையின் கரையோரங்கள் முழுவதனையும் கைப்பற்றினர். இப்பின்னணியில்தான் வடஇலங்கையும் டச்சு நிர்வாகத்திடம் சென்ற தெனலாம்.

தென்னிலங்கையினைப் போன்று கறுவா போன்ற வாசனைப் பொருட்களது செல்வாக்கு வடஇலங்கையில் காணப்படாது விட்டாலும்கூட வடஇலங்கையினையும் அவர்கள் முக்கியமானதொரு பிராந்தியமாகவே கருதினர்.

"யாழ்ப்பாணமானது மிகமுக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகும். கம்பனியினது நலத்திற்காக அதனைப் பாதுகாக்க வேண்டும். பிற இடங்களைப் போலன்றி இங்கு கம்பனியினது இறையுரிமையென்பது திட்டவட்டமாக ஆட்சேபத்திற்கிடமின்றி ஏற்பட்டுள்ளது."

என்பதாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடஇலங்கை முழுவதும் டச்சுக்காரரது நிலைப்பாடு காணப்பட்டது (சிவசாமி, வி.2014).

**டச்சுக்காரரது பொருளாதார நடவடிக்கைகள்**

போர்த்துக்கேயராயினும் சரி அல்லது போர்த்துக்கேயரைத் தொடர்ந்து வடஇலங்கையில் செல்வாக்கினைச் செலுத்திய டச்சுக்காரர் ஆயினும் சரி இறுதியாக வந்த ஆங்கிலேயரானாலும் அவர்கள் அனைவருமே பனை மரத்தினை "சீனி மரம்" என்றே அழைத்தனர் (பாக்கியநாதன்,மு. *2003*). அவ்வகையில் இவர்கள் சீனியினை அடிப்படையாகக்கொண்டே பனையினைப் பற்றி அறிந்தவர்களாகக் காணப்பட்டனர். இன்றும் கம்போடிய நாட்டில் இது "சீனிபாம்" என்றே அழைக்கப்படுகின்றது. அவ்வகையில் தென்கிழக்காசியா நோக்கி நகர்ந்த வர்த்தக, அரசியல், மத நோக்கங்களைக் கொண்டவர்கள் தென்னிந்தியக் கலாசாரத்தினைப் "பனை மரக் கலாசாரம்" என்றே அழைத்தமை குறிப்பிடத்தக்கது (Lubeigt, G., 1977). வடஇலங்கையில் டச்சுக்காரரது பொருளாதார நிலைப்பாடு தொடர்பாகப் பல்வேறு வகையான தகவல்கள் கிடைக்கப்பட்டு வந்தாலும்கூட அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு அக்காலப்பகுதியில் இப்பகுதிகளில் நடைபெற்றுவந்த பனைஉற்பத்தி மற்றும் வர்த்தகநடவடிக்கைகள் பற்றி வரலாற்று அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வாக அவை அமையவில்லையென்பதே உண்மை.

பொதுவாகவே இலங்கை முழுவதிலும் டச்சு ஆட்சியாளர்கள் தமது நிர்வாகத்தில் சிக்கனத்தினைக் கடைப்பிடித்தனர். இதற்கு வடஇலங்கையும் விதிவிலக்காக அமையவில்லை. போர்த்துக்கேயரைப் போலவே சுயநலமிக்கதாக அவர்களது பொருளாதார நடவடிக்கைகள் அமைந்திருந் தன. அதே நேரத்தில் போர்த்துக்கேயரைப் போலன்றி இவர்கள் நாடு பூராகவும் திட்டவட்ட மான தொரு பொருளாதாரக் கொள்கையினைப் பின்பற்றினரென்பது குறிப்பிடத்தக்கது. அவற்றிலொன்றுதான் உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தலென்பது. அவ்வகையில் வடஇலங்கையில் அவசியமான தேவைகளாகக் கருதப்பட்ட உணவு மற்றும் ஆடை வகைகளைப் பெறுவதன் பொருட்டு உள்நாட்டில் நெல் உற்பத்தி, புகையிலை உற்பத்தி, பருத்தி உற்பத்தி, சாயவேர் உற்பத்தி, மல்பரிச்செடி, பனம் பொருட்களது உற்பத்தி ஆகியவற்றினை ஊக்குவித்தனர் (அருந்தவராஜா,க. 2014). முத்து வர்த்தகம்,

யானை வர்த்தகம், குதிரை வியாபாரம் என்பவற்றுடன் பல்வேறு வரிகளையும் இவர்கள் அறவிட்டனர்.

வருமானத்தினைத் தரக்கூடிய சில கைத்தொழில்களையும் ஆரம்பித்தனர். உள்நாட்டிலும் தேசத்திற்கு வெளியிலும் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளிலும் இறங்கினர். அவர்கள் நினைத்தது போலவே வருமானமும் இவற்றின் மூலமாகக் கிடைத்தது. (அருந்தவராஜா.க. 2014) வருமானத்தின் சில பகுதிகளைத் தங்களது நலன்களைக் கருத்தில் கொண்டு தெருக்களாக மாற்றினர். இவர்கள் பெயரினை ஞாபகப்படுத்துகின்ற வகையில் டச்சு றோட்டுக்கள் என்ற பெயருடன் பல தெருக்கள் வடஇலங்கையின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. இத்தகைய தெருக்களும்கூட வடஇலங்கையில் அவர்களது பொருளாதார நடவடிக்கைக்குப் பக்கபலமாக இருந்தன. பொதுவாக இவர்கள் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக வடஇலங்கையில் வாழ்ந்துவந்த மக்களுக்குப் பல துன்பங்கள் ஏற்பட்டாலும்கூடப் பொருளாதார பின்புலத்தில் டச்சுக்காரரினால் ஏற்படுத்தப்பட்ட சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் மறக்கமுடியாதென்பதும் உண்மையே.

**பனை உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள்**

வடஇலங்கையில் டச்சுக்காரர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளில் பனைஉற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் என்பன சிறப்பாகப் பேசப்படுகின்றன. பனை மரத்திற்கு அந்தளவிற்கு இவர்கள் ஏனைய ஐரோப்பியர்கள் அளிக்காத முக்கியத்துவத்தினை அளித்திருந்தனர். எடுத்துக் காட்டாக அவர்கள் வடஇலங்கையினை நிர்வாகம் செய்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்குரிய சின்னமாகப் பனை மரத்தினையே அடையாளப்படுத்தியிருந்தனர். அதுமட்டுமன்றி அவர்களால் உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தப்பட்ட யாழ்ப்பாணத்திற்கான கொடியிலும்கூடப் பனை மரத்தினையே குறித்திருந்தனரெனலாம் (பாக்கியநாதன், மு. 2003). வடஇலங்கையில் உள்நாட்டு நிர்வாகத்தினை இவர்கள் திசாவைகள், முதலியார்கள், உடையார்கள், விதானைகள் என்பவர்கள் மூலமாகவே மேற்கொண்டனர். இவர்களது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட பகுதிகளிலும்கூட இத்தகைய அதிகாரிகளது உதவியுடன் பனை மரத்தினது உற்பத்தியினைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

வடஇலங்கையில் பனை மரப் பொருட்களிலிருந்து டச்சுக்காரர் பெற்ற வருவாயானது நாட்டினது பிற பகுதிகளிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கவில்லை. காரணம் ஏற்கனவே ஒரு இடத்தில் நாம் குறிப்பிட்டதனைப் போன்று நாட்டின் ஏனைய பகுதிகளில் இம்மரங்கள் பெருமளவில் உற்பத்தியாக்கப்படுவதில்லையென்பதே இதற்கான காரணங்களிலொன்றாகும். டச்சுக்காரரது காலத்தில் அரிசிச் சோற்றுக்குப் பதிலாக வறுமைப்பட்ட மக்களும், வசதியான சிலர் உணவுத் தட்டுப்பாடான நேரங்களிலும் பனம் பழத்தினைப் பயன்படுத்தினர். அவர்களுக்கு ஒருவேளை ஆகாரமாக இது பயன்பட்டது. இத்தகையதொரு பின்னணியிலேதான் பொருளாதாரத்தில் சிக்கனத்தினைக் கடைப்பிடித்த டச்சுக்காரரும் இதனை ஆதரித்தனர். அதுமட்டுமன்றி அவர்களது நோக்கங்களிலொன்றாக உள்நாட்டில் கிடைக்கின்ற மூல வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறுவதென்பதும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றினால் அக்காலப்பகுதியில் வடஇலங்கையில் ஏற்பட்ட அரிசித்தட்டுப்பாட்டினைக் குறைக்கலாமென்பதும் அவர்களது மற்றொரு நோக்கமாக இருந்தது (Arasaratnam,S., 1964).

பனம் பழத்தினை மட்டுமன்றிப் பனையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு பொருட்களையும்டச்சுக்காரர்கள் ஆதரித்தனர். பனையானது வேரிலிருந்து அதனது உச்சி வரை மனிதனுக்குப் பயன்படுகின்ற வகை சார்ந்ததாகும். அவ்வகையில் பனை மரத்தினை அழிக்காமல் பயன் பெறுவதே எமது சமுதாயத்திற்குப் பயனுள்ளதாகும் என்ற சிந்தனையினை அவர்கள் கொண்டிருந்தனர். கிழங்கு, ஒடியல், பணியாரம், பானம், ஊமல், கட்டடப்பொருட்கள், ஓலை, பதநீர், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, விலங்கு உணவு, பனாட்டு, வெல்லம், இனிப்பு வகை, புழுக்கொடியல், ஒடியல், மா, கள்ளு, சாராயம், ஈர்க்கு, தும்பு, நார் முடிகள், கலைப்பொருட்களின் உற்பத்தி, வெல்லம், தூரிகை, கூடைகள், கயிறு, கால் துடைப்பம், பொதி செய்யும் பெட்டிகள், பாய்கள், கடகம், பட்டை, தளர்நார், கூடைகள், இடியப்பத்தட்டு, நீத்துப்பெட்டி, விசிறிகள், விறகு, நொங்கு, கூழ் என்பனவற்றினது உற்பத்தியினையும் டச்சுக்காரர் ஊக்குவித்தனர் (Arasaratnam,S., 1964). இவற்றில் சிலவற்றினைத் தாமே பணங்கொடுத்து உள்ளூர்வாசிகளிடமிருந்து பெற்ற டச்சு அரசாங்கம் அவற்றினைத் தமது தாய் நாட்டுக்கு அனுப்பிவைத்தது. இவற்றில் உணவுப் பண்டங்களும் சிறு கைத்தொழிற் பொருட்களும் உள்ளடங்கியிருந்தன. தனிப்பட்டது டச்சு உத்தியோகஸ்தர்களும் தனிப்பட்ட ரீதியில் இவற்றினைப் பெற்றுத் தமது உறவினர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

பனை மரத்திலிருந்து பெறப்படுகின்ற பண்டங்கள் விசேட வைபவங்கள் தமிழரது இல்லங்களில் நடைபெறுகின்ற தருணங்களில் பரிமாறப்படுகின்ற பலகாரங்களில் பிரதான இடத்தினை ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலிருந்தே பெற்றிருந்தன. அதுமட்டுமன்றி மணவறையில் ஆலாத்துகின்ற தட்டுகளில்கூட இவை சில கிராமங்களில் தற்போதும் வைத்து ஆலாத்தப்படுவது வழமையாக உள்ளது. உறவினர்கள், நண்பர்களது வீடுகளுக்குச் செல்லுகின்ற போதும் இவற்றிலிருந்து பெறப்பட்ட ஒரு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வது வழக்கமான செயலாகக் காணப்பட்டது. இத்தகைய வழமையானது போர்த்துக்கேயரது காலத்திலும் தொடர்ந்துவந்த டச்சுக்காரரது காலத்திலும் காணப்பட்டது (அருந்தவராஜா,க. 2016). இத்தகைய பொருட்களில் பனாட்டு, ஒடியல், ஒடியல் மா, கிழங்கு, கைப்பணிப் பொருட்கள் போன்றன பிரதான இடத்தினைப் பெற்றன.

மருத்துவ குணங்கள் ஏராளமாகப் பனம் பொருட்களில் இருப்பதன் காரணமாவும் கூட டச்சுக்காரர் இதனை ஆதரித்திருக்க வேண்டும். காரணம் இரத்த அழுத்தம், நீரிழிவு, மலச்சிக்கலைத் தவிர்த்தல், சூட்டினைத் தணித்தல் என்பவற்றுக் கெல்லாம் இது ஆதாரமாக இருப்பதனைத் தற்போதும் அறியலாம். அவ்வகையில் அக்கால மக்களின் உணவுப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு இப்பொருட்களைப் பயன்படுத்துமாறு டச்சுக்காரரினால் வடஇலங்கையருக்கு கோரிக்கை விடப்பட்டதுடன் அதே நேரத்தில் இவ்விடயமாக அக்கால மக்கள் சோம்பேறிகளாக இருப்பது பற்றியும் டச்சுக்காரர் எடுத்துக்காட்டத் தவறவில்லை (Memoir of Hendrich Zwaadecroon). மேலும் அக்காலத்தில் காணப்பட்ட உணவுப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்கின்ற நோக்குடன் நிலங்களை அளவிட்டு மக்களைப் பயிர் செய்கையில் ஈடுபடுமாறு தூண்டினர். பயிர் செய்யப்படாவிட்டாலும்கூட நிலங்கள் அனைத்தும் மேற்பார்வை செய்யப்பட வேண்டுமென்ற சட்டம் காணப்பட்டது. இத்தகைய சட்டத்தின் ஓர் அம்சமாக அப்பகுதிகளில் உள்ளடங்கிய பனைகள் காக்கப்பட வேண்டுமென்ற நியதியும்கூட நிலவியது.

பனை மரத்திலிருந்து உணவுப் பண்டங்களைப் பெற்றது மட்டுமன்றிக் கட்டடங்கள் கட்டுவதற்கான வளை, கப்பு, கைமரம் போன்றவையும்டச்சுக்காரர்காலத்தில்செய்யப்பட்டன

(கணபதிப் பிள்ளை, க.2006). மேலும் இவர்களது காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர் பல்வேறு தேவைகளின் நிமித்தமாகக்கொண்டு வரப்பட்டிருந்தனர். குறிப்பாகச் சோழமண்டலக் கரையிலிருந்து வந்தவர்கள் வடஇலங்கையில் ஆடை நெய்தல், சாயம் போடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். இவர்களது வருகையினால் வடஇலங்கையில் ஆடை உற்பத்தி அதிகரித்ததாகத் தகவல்கள் உள்ளன. இவ்வாறு வந்த தொழிலாளர்களில் பலர் பனம் பொருட்களின் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டமைக்கான குறிப்புக்கள் உள்ளன. இதனூடாகத் தமது உணவுத் தேவையினை அவர்கள் பூர்த்தி செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

வடஇலங்கையில் பனை மரங்கள் அடர்த்தியாக உள்ள பகுதிகளில் பதநீர் எடுக்கின்ற பழக்கம் டச்சுக்காரரது காலத்தில் அதிகரித்துக் காணப்பட்டது. இத்தகைய பதநீர் பற்றி சங்ககால இலக்கியங்களில் குறிப்புக்கள் இருப்பதனைப் பற்றி ஏற்கனவே ஒரு இடத்தில் பார்த்துள்ளோம். இருப்பினும் இக்கைத்தொழிலானது வடஇலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தின் பின்னராக டச்சுக்காரரது காலத்திலேதான் சிறப்பாக ஆதரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது (பாக்கியநாதன்,மு. 2003).

டச்சு நிர்வாகத்தில் பதநீரிலிருந்து பனை வெல்லம்தயாரிக்கப்பட்டது. இதன்பொருட்டு வடமராட்சியில் டச்சுக்காரர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பனை வெல்லக்கட்டித் தொழிற்சாலை ஆங்கிலேயராட்சிக்காலம்வரை தொடர்ந்து இயங்கியது. கேரளாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஈழவர்கள் மூலமாகவே பனையிலிருந்து பதநீர் சேகரிக்கப்பட்டது. அப்பகுதியில் இருந்த சிலரும் இதன் மூலமாகத் தொழில் வாய்ப்பினைப் பெற்றனர். இதனால் இவர்களது காலத்தில் பனங்கள்ளினது விலையும் அதிகரித்ததெனலாம். தற்போது வரை இத்தொழிற்சாலையின் எச்சங்கள் அப்பகுதிகளில் காணப்படுகின்றன. முறைக் கருப்பநீர் என்ற சொற் பிரயோகமானது இற்றைவரைக்கும் வடமராட்சிப் பிரதேசத்தில் வழக்கிலிருந்து வருவதாக செ. கிருஸ்ணராசா குறிப்பிடுகின்றார் (கிருஸ்ணராசா,செ. 2000). இதனது கருத்து யாதெனில் பனங் காணியினுடைய சொந்தக்காரனும், பதநீர் வடிக்கின்ற தொழிற்சாலையினை வைத்திருப்பவனும் பெற்றுக்கொள்ளுகின்ற பதநீரினை ஒன்றுவிட்ட நாட்களில் பெற்றுக் கொள்வதனை குறிப்பதாக அமைகின்றது. இதன்பொருட்டுக்கடற்கரையில்சுண்ணாம்புச் சூழையினை வைத்து சுண்ணாம்புப் பொடி தயாரிக்கும் தொழிற்திறனைக்கூட டச்சுக்காரர் வடஇலங்கை மக்களுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டச்சுக்காரர்கள் பனையினது தண்டிலிருந்து புதிய உற்பத்திகளை உருவாக்குகின்றமுயற்சியில் ஈடுபட்டனர். அதனது வெளிப்பாகமானது நீண்டகாலமாகவே இவர்களால் உலர வைக்கப்பட்டு எரிபொருட்களாக மாற்றப் பட்டன. அதுமட்டுமன்றி அதற்குப் புதிய பண்பாட்டினையும் இவர்கள் கொடுக்க விரும்பினர். இவர்கள்பனைமரப்பொருட்களில் அக்கறை கொண்டவர்களுக்கு பனை மரத்தினது தண்டானது நார்களைப் பிரித்தெடுப்பதற்கு எவ்வாறு அவை அடிக்கப்பட வேண்டுமென்பதனையும், பிரித்தெடுக்கப்படுகின்ற கறுப்பு வெள்ளை நார்களையும் அவற்றினது பெறுமதியினையும் புரிய வைத்தனர். இது இலகுவானதொரு முறையாக இருந்ததுடன் தென்னை மரத்திலிருந்து நாரினைப் பிரித்தெடுப்பது போன்று இது கடினமாக இருக்கவில்லை எனவும் விளங்கப்படுத்தினர் (Martyn,H., 1923).

இவர்களது காலத்தில் வடஇலங்கையின் பிரசித்திபெற்ற தீவுகளிலொன்றாகக்

கருதப்பட்ட நெடுந்தீவானது டெல்வ்ற் என அழைக்கப்பட்டது. பொதுவாக தீவுப்பகுதிகளில் உள்ள தீவுகளுக்குத் தாம் நினைத்த பெயரினையே சூட்டி அவற்றினை அழைத்தமை அவர்களது பொதுவான பண்பாகக்காணப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. தற்போதும் நெடுந்தீவிற்கு இப்பெயரே பாவனையில் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு டச்சுக்காரரது காலத்திலும் பின்வந்த ஆங்கிலேயரது காலத்திலும் பனை மர உற்பத்தியானது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாகஇதனது பரப்பளவாகக்காணப்பட்ட 11500 ஏக்கர் நிலப்பகுதியில் 1100 ஏக்கர்கள் பனை மர வளர்ப்பின் பொருட்டுப் பயன்படுத் தப்பட்டது. இங்கிருந்து டச்சுக்காரரது காலத்தில் பெருமளவிலான பனம் பொருட்கள் பெறப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாய்கள், பனாட்டு, கிழங்கு, ஒடியல், பனங்கொட்டைகள் போன்றன இவற்றில் குறிப்பிடத்தக்கன (Martyn,H., 1923). புவியியல் அடிப்படையில் தென்னிந்தியாவிற்கு மிக அண்மையில் இப்பகுதி அமைந்திருந்தமையின் காரணமாக ஏராளமான பனம் பொருட்கள் காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவிற்கு அனுப்பப்பட்டன.

டச்சுக்காரரது காலத்தில் இலங்கை மக்களது மரபுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக்கொண்டு தேசவழமை உருவாக்கப்பட்டது. இது 1707 இல் அரசாங்கத்தினால் சட்ட மாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதில் ஒரு இடத்தில் வடஇலங்கைப் பனை மரங்கள் தொடர்பான ஆட்சி பற்றி விபரிக்கப் பட்டுள்ளது. அது வருமாறு,

> "காணி ஒருவனுடையதாக இருக்க அதில் நிற் கின்ற முதுபனைகள் வேறொருவனுக்கு உடையதுகளாயிருந்தாலும் கீழ்ப்பட்ட வடலிகள் நிலக் காரனுக்கேயன்றி அம் முதுபனைக்காரனுக்காக மாட்டாது. இது காரியத்துக்கு அராலியென்கிற குறிச்சி மாத்திரம் புறநீங்கல். அவ் விடத்திலே ஒரு பழைய வழமை நடந்துவருகிறது. அதென்னவென்றால் அந்த முதுபனைக்குடையவர்களாய் இருக்கிறவர்கள் அவைகளின் கீழ்ப்பட்ட வடலிகளையும் பிடித்து ஆண்டு வருவார்கள். அந்த ஊரிலே வடலி வெகுத்த மில்லாததற்கு நியாயமிதுவே. ஏனென்றால் விழுபனங்காய் எடாமல் விட்டிருந்த இடங்களிலே முளைத்த வடலியுண்டான காலத்திலும் அந்தக் காணிக்குடையவன் காணி செய்கிற போகத்திற்கு வந்து நிலத்தை உழுது புரட்டி அந்த முளைகளைப் பாழாக்கி விடுவான். அதென்னவென்றால் தன்னுடைய நிலத்திலே மறுபேருடைய பனை உண்டாகாத படியால்தான். தென்மராட்சிப் பகுதியிலும் பச்சிலைப்பள்ளிப் பகுதியிலும் நடந்துவருகின்ற வழமையாவது நிலம்நீங்கலாகப் பனைமரங்கள் மாத்திரம் கொம்பனி யாரின் தோம்பிலே எழுதப்பட்டிருந் தமையினால் அந்த முதுபனை மரக்காரனுக்கேகீழ்வடலிகளும் உடையவைகளாம். ஆனால் நிலமும் முதுபனைகளும் தோம்பிலே எழுதப்பட்டு அவைகளுக்காகக் கடமை இறுத்தவந்தால் அப்போது

கீழ் வடலிகள் நிலக்காரனுக்கு உடையவைகள்" (பத்மநாதன். சி, 2002).

வடஇலங்கைத் தமிழ் மக்களது வாழ்வியலில் பனை மரமும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களும் மங்கலப் பொருட்களாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அமங்கல நிகழ்வுகளுக்கு இவை பயன்படுத் தப்படுவதில்லை. சங்ககால இலக்கியங்களிலொன்றான புறநானூற்றில் இவை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. படைவீரர்கள் போருக்குச் செல்லுகின்ற சமயங்களில் இதனது பழங்களையும் கிழங்கினையும் சுவைத்துச் சென்றதாகக் குறிப்புக்கள் உள்ளன. வடஇலங்கையில் டச்சுக்காரர் காலத்தில் மட்டுமன்றித் தற்காலங்களிலும் இவை மங்கலப் பொருட்களாகவே பயன்படுத்தப்படுகின்றன. பனை மரத்தினை எல்லையாகக் குறிப்பிட்டுச் சொல்லுகின்ற வழக்கமானது பண்டு தொட்டு வடஇலங்கையரிடம் இருந்து வந்தாலும் கூட டச்சுக்காரரது காலத்திலேதான் இப்பழக்கமானது முக்கியத்துவப்படுத்தப்பட்டதனை அவதானிக்க முடிகின்றது. அரசு நிலங்களைப் பயிர்ச் செய்கையின் பொருட்டு அளவிடுகின்ற சந்தர்ப்பங்களில் பனை மரங்கள் அதனது எல்லைகளாக பயன்படுத்தப்பட்டன. எச். மாட்டின் என்பவர் டச்சுக்காரர் காலத்து நெடுந்தீவினது எல்லையினைப் பற்றி விபரிக்கின்றபோது பின்வருமாறு விவரிப்பதனை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

"இது சரி தட்டையான பவளத் தீவாகும். இதனது வடபாகம் பனைகளையும் தென்பாகமானது கற்பாறைகளையும் கொண்டதாகவும் புற்களாலும் சூழப்பட்ட சூரிய மரங்களையும் கொண்டுள்ளது" (Martyn,H., 1923).

ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டுவந்த சில ஊர்களது பெயர்களை டச்சுப் பெயர்களாக மாற்றிய இவர்கள் பனை மரத்துடன் தொடர்பான ஊர்களது பெயர்களை மாற்றாமல் அப்படியே பயன்படுத்தி வந்தமையானது சிலவேளைகளில் அவர்கள் பனை மரத்தினது முக்கியத்துவத்தினை உணர்ந்தமையின் பின்னணியில்கூட இருக்கலாம். உதாரணமாக பனங்காமம், வடலியடைப்பு, பனை மரவடி, வடலியடி, கருகம்பனை, பன்னாலை, பனங்கொட்டில் போன்ற இடங்களது பெயர்களைக் குறிப்பிடலாம். வட இலங்கை மக்கள் பனையிலிருந்து ஊமல், கரி போன்றனவற்றினையும் பெற்றனர். இவர்கள் டச்சுக்கிழக்கிந்தியக் கம்பனியின் பணியாளர்களுக்குக் கோழி, செம்மறியாடு, பால், தயிர், வாழைப்பழம், வெற்றிலை போன்றவற்றினையும் விற்பனை செய்து இலாபம் பெற்றனர். இதனால் டச்சுக்காரர்களது காலத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவாய் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வடஇலங்கை மக்களுக்குக் கிட்டியதெனலாம்.

வடஇலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பனைசார் உற்பத்திகளுக்கு உள்நாட்டில் தென்னிலங்கை, மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் பெரும் கிராக்கியிருந்தது. உள்நாட்டுப் போக்குவரத்திற்கு ஏற்ற துறைமுகமாக கொழும்புத்துறை, கச்சாய் போன்ற துறைமுகங்கள்காணப்பட்டன. இத்துறைமுகங்களின் ஊடாக டச்சு நிர்வாகத்தில் பனம் பொருட்கள் மேற்கூறப்பட்ட பகுதிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டன. குறிப்பாகத் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் இவற்றினை விற்பனை செய்வதன் மூலமாக வடஇலங்கையருக்கு அதிகளவான வருவாய் கிடைத்தது. இப்பகுதிகளில் வடஇலங்கையிலிருந்து கொண்டுவரப் படுகின்ற பனம் பொருட்களை விற்பனை செய்வதன் பொருட்டு அங்காடிகள் சில இருந்துள்ளன. அதுமட்டுமன்றி இத்தகைய பொருட்களைப் படகுகளிலிருந்து இறக்கி அவற்றினை

உள்நாட்டுக்குள் நடைபயணமாகச் சென்று வடஇலங்கையர்கள் விற்பனை செய்தமை தொடர்பான குறிப்புக்களும் உள்ளன. இவ்வாறே கொழும்பிலும், காலியிலும் இத்தகைய பனம் பண்டங்கள் விரும்பி நுகரப்பட்டன (Arasaratnam,S. 1958). பின்னர் அங்கிருந்து அரிசி போன்ற உணவுப் பொருட்களை தாம் கொண்டு சென்ற படகுகளில் மீளவும் ஏற்றிவந்தனர் (சிவசாமி,வி. 2014).

உற்பத்தி செய்யப்படுகின்ற பனை மரங்களில் ஒரு பகுதியினை அப்படியே மரமாகவே இவர்கள் பெற்று அவற்றினைப் பல்வேறு தேவைகளின் நிமித்தமாகக் கொழும்பிற்கு அனுப்பினர். அதாவது தென்னிந்தியாவில் நாகபட்டினத்திலும் கொழும்பிலும் அரசாங்கத்திற்குத் தேவைப் பட்ட பனை மரங்கள் குறிக்கப்பட்ட பணத்தினைச் செலுத்துவதன் மூலமாக வடஇலங்கையிலேயே பெறப்பட்டன. அரசாங்கத்திற்கு எப்போதெல்லாம் பனை மரங்கள் தேவைப்படுகின்றனவோ அப்போதெல்லாம் அரசாங்கத்திற்கு இப்பகுதி மக்கள் பனை மரங்களை ஒப்படைத்தல் அவசியமாக இருந்தது. இதனைவிட டச்சு உத்தியோகஸ்தர்கள் சிலரும்கூட அரசாங்கத்தின் பெயரினைச் சொல்லித் தமது சொந்தத் தேவையின் பொருட்டுப் பனைகளைக் கொள்வனவு செய்த சம்பவங்களும் உண்டு. அதுமட்டுமல்ல தறித்த பனைகளைத் தமது செலவிலேயே பனை மரங்களின் உடமையாளர்கள் துறைமுகங்கள்வரை கொண்டு சென்று ஒப்படைக்க வேண்டியுமிருந்தது. இத்தகைய பனைமரங்கள் வைரமானவைகளாகக் காணப் பட்டதனால் பாதுகாப்பின் பொருட்டுத் தென்னிலங்கையில் பாதுகாப்பு அரண்களுக் காக உபயோகப்படுத்தப்பட்டன. டச்சுக்காரர் இல்லங்கள் அமைக்கவும் படகுகளைக் கட்டுவதற்கும் இவற்றினை வடஇலங்கையில் அமைந்துள்ள துறைமுகங்களின் ஊடாகத் தென்னிலங்கையின் பல பகுதிகளுக்கும் எடுத்துச்சென்றனர்.

டச்சுக்காரரது காலத்தில் அவர்களும் போர்த்துக்கேயரைப் போன்றேதுறைமுகங்கள் ஒவ்வொன்றிற்கும் அண்மையில் கோட்டை களை அமைத்திருந்தனர். இவை போர்த்துக் கேயரிடமிருந்து கைப்பற்றப்பட்டவைகளாகவே அதிகளவில் இருந்தன. இவற்றில் சிலவற்றினை டச்சுக்காரர் தமது நடவடிக்கைகளுக்கும் அடையாளத்திற்கும் ஏற்றவகையில் மாற்றியிருந்தனர். அவற்றில் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, கச்சாய், பூநகரி, அரிப்பு, யாழ்ப்பாணம், இலுப்பைக்கடவை என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறையில் அமைந்துள்ள துறைமுகங்கள் பெரிதாக இருந்தமையினால் அங்கிருந்த கோட்டைகளில் வைத்தே தென்னிந்தியாவிற்குப் பயணம் செய்வோருக்கான நுழைவுச் சீட்டுக்கள் கொடுக்கப்பட்டன. கொழும்புத்துறை மற்றும் கச்சாய் துறைமுகங்கள் அதிகளவிற்கு வன்னிக்கான போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதெனலாம். பருத்தித்துறையில் உள்ள கோட்டையே சோழமண்டலம் மற்றும் திருகோணமலைக்கும் இடையிலான போக்குவரத்தில் பிரதான பங்கினை வகித்திருந்தன (Dairy of Jan Schreuder, 535). பருத்தித்துறையில் அமைந்திருந்த கோட்டைக்குப் பொறுப்பான காலாற்படைத் தலைவனே இப்பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பனை மரங்கள் தொடர்பான விபரங்களைக் கண்காணிப்பவராக விளங்கினார் (கணபதிப்பிள்ளை, க. 2006).

டச்சுக்காரர் காலத்தில் வட இலங்கையிலிருந்த முக்கியமான துறைமுகங் களின் மூலமாக சர்வதேச அளவில் வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றன. குறிப்பாக இத்தகைய வர்த்தக நடவடிக்கைகள் பருத்தித்துறை, காரைநகர், மாதோட்டம்,

ஊர்காவற்றுறைதுறைமுகங்களின் மூலமாகவே அதிகளவில் நடைபெற்றன. இத்தகைய சர்வதேச வர்த்தகத்தில் வடஇலங்கையுடன் இணைந்த பிரதான நாடாக இந்தியாவினைக் குறிப்பிடலாம். அதிலும் இவ்விடயமாகக் தென்னிந்திய நிலப்பகுதிகளுக்குச் சிறப்பிட முண்டு.

அமைவிடம் காரணமாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியிலான உறவுகள் இரு நாடுகளுக்கு இடையிலும் இருந்து வந்தமையினை ஆதாரங்கள் மூலமாக அறியமுடியும். அத்தகைய உறவினது தொடர்ச்சியே வடஇலங்கையினை டச்சுக்காரர் தமது நிர்வாகத்தில் வைத்திருந்த சமயங்களில் ஏற்பட்டது. இத்தகைய உறவில் வர்த்தகமே பிரதான இடத்தினை வகித்திருந்தது. இவர்கள் வடஇலங்கையில் முத்து வர்த்தகம், யானை வர்த்தகம் போன்றவற்றில் ஏகபோக உரிமையினை நிலைநாட்டியது போன்று பனை மரம் சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளில் செய்யவில்லை. இதனால் அரசுடன் தனியாரும்கூட இவற்றில் ஈடுபட்டு வந்தனர். இருப்பினும் தனியார் அரசிற்கு தீர்வையினைச் செலுத்தியே தமது நடவடிக்கைகளைத் தொடர வேண்டியவர்களாகக் காணப்பட்டனர். வடஇலங்கை மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆட்சியாளர்களுக்கு கோழி, தயிர், செம்மறியாடு, பால், பழவகைகளை வழங்கி அவற்றின் மூலமாக ஆதாயத்தினைப் பெற்றனர். இதனால் இவர்களது காலத் தில் வடஇலங்கை மக்கள் தொழில் வாய்ப்புக் களையும் பல்வேறு வடிவங்களிலும் பெற்றமை அவதானிக்கத்தக்கது. அதாவது சிறிய பனை வளர்ப்பாளர்களும் நார் சேகரிக்கின்ற வறிய தொழிலாளர்களும், நடுத்தர வர்க்கத்தவர்களும் அதிகளவிலான நன்மையடைந்தனர். பேராசையால் அடுத் தவரது நிலங்களில் உள்ள பனைகளும் களவாகத் தறிக்கப்பட்ட வரலாறும் உண்டு. நாரினைப் பிரித்தெடுக்கின்ற நோக்கத்தில் சிறிய பனைகளும் தறிக்கப்பட்டன. இப்பின்னணியில் டச்சு அரசிற்கு இது தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகளும் கிடைத்தன. ஆனால் அது பற்றி அரசு அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. டச்சு நிர்வாகத்தில் புகையிலையும் பனை வளமும் அவர்களுக்கு பிரதான வருமான மூலங்களிலொன்றாக வடஇலங்கையில் அமைந்திருந்ததாக மு.குணசிங்கம் குறிப்பிடுகின்றார் (Gunasingam,M. 2008).

வடஇலங்கையிலிருந்து பனை மரத்தினது பண்டங்கள் மலபார், மதுரை, கொரமண்டல் ஆகிய பகுதிகளுக்கு ஏற்றுமதியாயின. வட இலங்கையின் பனம் பண்டங்களுக்கு நல்ல மதிப்புக் காணப்பட்டதன் பின்னணியில் அதிகளவான வருமானம் கிடைத்தது. குறிப்பாகப் பனாட்டு, கிழங்கு, ஒடியல் போன்றவற்றினைக் குறிப்பிட லாம் (Arasaratnam, S. 1988). இவற்றுடன் கூடவே தேங்காய் எண்ணெய், வேம்பு என்பனவற்றி னையும் எடுத்துச் சென்றனர். சில சந்தர்ப்பங் களில் ஏராளமான இஸ்லாமிய வியாபாரிகளும் கேரளாவிலிருந்து ஊர்காவற்றுறை துறை முகத்தினை வந்தடைந்து இவற்றினைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

பொதுவாக இத்தகைய வர்த்தகமானது வட இலங்கை மற்றும் தென்னிந்தியத் தரகர்களது கைகளிலேதான் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் இத்தகைய பனம் பண்டங்களினை ஏற்றுமதி செய்து குறிப்பாக வடஇலங்கையில் தட்டுப்பாடான பொருட்களை அப்பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்தனர். அரிசி, மாடுகள், ஆடை வகைகள், சீனி, அபின், பட்டு என்பன இறக்குமதி செய்யப்பட்டன. பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, செம்பு, போன்ற உலோகங்களையும் கூட இவர்கள் அங்கிருந்தே பெற்றனர். இங்கிருந்த பள்ளிவாசல்களைத் திருத்தவும் புதிதாக அமைக்கவும் கேரளா விலிருந்து பாலை, முதிரை போன்ற வைர மரங்களும் இஸ்லாமியர்களினால் இறக்கு மதி செய்யப்பட்டன. நயினாதீவில்

அமைக்கப்பட்ட பள்ளிவாசலில் இவ்வாறு டச்சுக்காரர் காலத்தில் கொண்டுவரப்பட்ட வைர மரங்கள் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. வங்காளம், கோல்கொண்டா ஆகிய இடங்களிலிருந்து வருகை தருகின்ற இஸ்லாமிய வியாபாரிகள் பெருமளவிலான அரிசியினைக் கொண்டு வந்தனர். டச்சுக்காரரது அறிக்கையொன்று 1680 அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பல்வேறு வகையான பனம் பொருட்கள் 256 படகுகளில் இந்தியாவிற்கும் கொழும்பிற்கும் அனுப்பப்பட்டதாகக் கூறுகின்றது (HagueArch.V.O.C,Inv. 1322/Gunasingam,M. 2008).

பனம் பண்டங்கள் ஒருபுறமிருக்க டச்சு நிர்வாகத்தில் பனை மரங்களாகவும் பலகைகளாகவும் பனை மரங்கள் தென்னிந்தியப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மலபாருக்கும், மதுரைக்குமே இவை அதிகளவில் ஏற்றுமதியாயின. இங்கிருந்து அங்கு அனுப்பப்படுகின்ற இவற்றுக்கு அதிகளவான பணம் கிடைத்தது. இதனால் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதிகளில் அதிகளவான பனைகள் தறித்தெடுக்கப்பட்டன. ஆங்கிலேயரது காலத்தில் மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புக் காரணமாக பனை மரங்களைத் தறிப்பதனைத் தடுப்பதற்குச் சட்டங்கள் பல பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (Martyn,H. 1923).

இவ்வாறு கொண்டு செல்லப்படுகின்ற பனை மரப்பலகைகள் கட்டடங்கள் அமைப்பதற்கும், கதவுகள், சாளரங்கள், நாற்காலிகள், மேசைகள் உட்பட அழகான மரச்செதுக்கல் வேலைகளுக்கும் மேற்கூறப்பட்ட தென்னிந்தியப் பிராந்தியங்களில் பயன்படுத்தப்பட்டன. தற்காலத்திலும்கூட கேரளப் பகுதிகளில் குறிப்பாக எர்ணாக்குளம், திருவாங்கூரின் சில பகுதிகளில் வடஇலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பனை மரப் பலகைகளில் செதுக்கப்பட்ட சிற்பவேலைப்பாடுகளின் எச்சங்களை அவதானிக்க முடியும். அக்காலப்பகுதியில் தென்னிந்தியப் பகுதிகளிலுள்ள பனை மரங்களைத் தறித்துப் பலகைகளாக மாற்றுவதற்கு ஏற்படுகின்ற செலவினைவிட வடஇலங்கையிலிருந்த பனை மரங்களைத் தறித்து அவற்றினைப் பலகைகளாக மாற்றிப் படகுகளில் கொண்டுசெல்லுவதற்கு ஏற்படுகின்ற செலவுகுறைவாகக் காணப்பட்டமையே இத்தகைய நிலைக்கு முக்கியமான காரணங்களிலொன்றாகும். பனை மரங்களாக அனுப்பப்படுகின்றபோது அவை கடலிலே மிதக்கவிடுவதன் மூலமாகக் கொண்டு செல்லப்படுவது வழக்கமானதாகக் காணப்பட்டது.

வடஇலங்கையில் டச்சு நிர்வாகத்தில் பனை மரங்கள் மட்டுமன்றிப் பலாமரம், வேப்பமரம், வன்னிக் காடுகளில் காணப்பட்ட பிற வைரமரங்கள் சிலவும் வர்த்தக நடவடிக்கைகளில் பிரதான இடத்தினைப் பெற்றன. இவை கூலி கொடுத்தோ அல்லது இறக்குமதி செயற்பட்டுத் தொழிலாளர்கள் மற்றும் அடிமைகள்மூலமாகவோ வெட்டிக்கப்பல்கள் ஊடாகத் தங்களது நாட்டிற்கு அனுப்பினர். நகர் புறங்களில் உள்ள சுதேசிகள் சிலரும் இவற்றினை டச்சுக்காரரிடமிருந்து பெற்றுத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தினர்.

டச்சுக்காரரது காலத்தில் அத்திவாரமிடப்பட்ட பனைநாரினது ஏற்றுமதியானது ஆங்கிலேயரது காலத்தின் நடுப்பகுதியளவில் யாழ்ப்பாணம், தீவுப்பகுதிகள், வன்னி என்பனவற்றிலும் வளர்ச்சி கண்டன. மேலும் ஆங்கிலேயரது காலத்தில் Vavaseur & Co என்ற நிறுவனமானது தரகர்களின் மூலமாகப் பனை மரசார் ஏற்றுமதிகளை ஆரம்பித்தது. ஆங்கிலேயரது காலத்தில்தான் அதிகளவான பனை நார்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இக்காலகட்டத்தில் முதலாளி ஒருவர் பவுணொன்றுக்கு 9 சதங்களை வருமானமாகப் பெற்றார். இஸ்லாமிய மக்களது உதவியுடன்

தமது வருமானத்தினை ஆங்கிலேயர் அதிகரித்தனர். 1916களில் Ceylon Sugar Refinery Company ஊடாக வல்வெட்டித்துறையில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலையின் மூலமாக வெல்ல உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது (Martyn,H. 1923).

ஆங்கிலேயரது காலத்தில் சோமசுந்தரப் புலவர் போன்ற புலவர்களும், ஆர்வலர்கள் பலரும் சமகாலத்தில்வெளிவந்துகொண்டிருந்த உதயதாரகை, ஈழகேசரி போன்ற பத்திரிகைகளும் பனையினது மகத்துவத்தினை அக்கால மக்களுக்கு உணரச் செய்தன. முதலாம், இரண்டாம் உலகமகாயுத்த காலப்பகுதிகளில் உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் தடைப்பட்ட நிலையில் வடஇலங்கையருக்குப் பிரதான உணவாகக் காணப்பட்டது பனையினது உணவுப் பொருட்களே. அச்சமயத்தில் வேலைவாய்ப்புக்களை வழங்கியது அதனது பாகங்களே. இருப்பினும் ஆங்கிலேயரது காலத்தின் இறுதியளவில் பனையுடன் தொடர்பான தொழில்களை மேற்கொள்பவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்தவர்களென்ற எண்ணம் பலருக்கு இருந்துவந்தமையின் பின்னணியில்தான் இத்தொழிலில் வசதிகள் பல இருந்தும் துணிந்து மக்களில் பலர் ஈடுபடவில்லையெனலாம். இது தற்போதும் தொடர்கதையாக உள்ளது.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னராக மகாத்மா காந்தியினது ஒவ்வொரு பிறந்த நாளையும் இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையானது பனை மகோற்சவமாகக் கொண்டாடுகின்ற வழக்கத் தினை வடஇலங்கையில் கொண்டிருந்தது அதன் போது பனை இனங்களைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் இச்சபையினால் முன்னெடுக்கப்பட்டன. அதிலொன்றாகவே 10000 பனம் விதைகள் மக்களுக்கு வழங்கப்பட்டது (ஈழகேசரி,1953.09.20). மேலும் ஒவ்வொரு வரும் 10 பனம் விதைகளையாவது நாட்ட வேண்டுமெனவும் பனை மரத்தினது உணவுகளைச் சேர்த்தும் தனித்தும் உண்ணுதல் வேண்டும் எனவும் பனைகளைத் தறிக்கக்கூடாதெனவும் பல தீர்மானங்கள் அச்சபையினால் எடுக்கப்பட்டன. பனைமகோற்சவ நாளன்று பனைதொடர்பானபொதுஅறிவுப்போட்டிகள் நடைபெற்றன (ஈழகேசரி,1956.11.18). அக்காலப்பகுதியில் பனம் பொருட்களுக்கான பொருட்காட்சிகள்கூட இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1950களில் கல்லோயாப் பகுதிகளில் வீடுகளை அமைப்பதற்குத் தேவைப்பட்ட பனம் மரங்கள் வடஇலங்கையிலிருந்தே தறித்தெடுத்துக் கொண்டு செல்லப்பட்டன. இதனைக் கண்டிக்கின்ற ஆய்வாளர்களும் பனை மரங்களின் அவசியத்தினை அவ்வப்போது மக்களுக்கு எடுத்துக்கூறி வந்தனர் (ஈழகேசரி,1951.09.02) இம்முயற்சியானது தற்காலத்திலும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. மிக அண்மையில் 24000 பனைகள் வடஇலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் சட்டரீதியாகத் தறிக்கப்பட்டதாக அரச அதிபரது செய்திக்குறிப்பில் காணப்படுகின்றது (உதயன், 2016.10.20).

உண்மையில் இந்தியாவில் பனை மரங்களின் தொகையானது வடஇலங்கையில் காணப்பட்ட பனைமரங்களது எண்ணிக்கையிலும் அதிகமாக இருந்தபோதிலும் அந்நாட்டவர்களினால் வடஇலங்கையிலிருந்த பனைகளும் பனம் பண்டங்களுமே விரும்பி வாங்கப்பட்டமை அவதானிக்கத்தக்கது. பொதுவாக உள்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் பனையும் அது சார்ந்த பொருட்களது வர்த்தக நடவடிக்கைகளும் சிறப்பாக நடைபெற்றமைக்கு ஒரு காரணம் டச்சுக்காரால் வடஇலங்கையின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்ட தெருக்களே. அவர்களால் அமைக்கப்பட்ட பெரிய தெருக்கள் குறிப்பிட்ட அகலத்திற்கு அமைக்கப்பட்டு அவற்றினை சுதேசிகளே பராமரித்தல் வேண்டுமென

அக்காலப் பகுதிகளில் அக்காலப்பகுதியில் அறிவுறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது (சிவசாமி,வி. 2014).

**நிறைவுரை**

தொகுப்பட்டப் பார்த்தால் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரான காலப் பகுதியில்பனைமரமானது வட இலங்கையினது பொருளாதாரத்தினது உயிர்நாடியாக இருந்த தென்பதில் சந்தேகமில்லை. பனை மரமானது வட இலங்கை மக்களுக்கு இறைவனால் இயற்கையாகக் கொடுக்கப்பட்ட தொரு வாழ்வாதார வளமாகும். ஆரியச்சக்கரவர்த்தி களின்பின்னராக இதற்கு முக்கியத்துவத்தினைக் கொடுத்து இவ்வளத்தின் பெருமையினை உலகறியச் செய்தவர்கள் டச்சுக்காரரே. பல்வேறுகாலத்திற்குப்பின்னதாகப்பனையினது முக்கியத்துவமானது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அதிகரிக்க ஆரம்பித்த காலம் டச்சுக்காரரது காலமே. பனை உற்பத்திகளை ஊக்குவித்த இவர்கள் அதனூடாகத் தமது வருமானத்தினைப் பெருக்கிய அதேநேரத்தில் சுதேசிகளும் பயனடைகின்ற வகையில் செயற்பட்டனர். இவர்களால் இதற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவமானது 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தொடர்ந்தது. தற்காலத்தில் இதனது அவசியத்தினை உணர்ந்த அரசு பல்வேறு திட்டங்களையும் சட்டங்களையும் அறிமுகப்படுத்துவதன் மூலமாக இவற்றினது பெறுமதியினை மக்களுக்கு உணர வைத்து வருகின்றது. பனை அபிவிருத்திச்சபையானது பனையினை நம்பி வாழுகின்ற சமூகத்தின் அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டு மூலதன நிதி மூலமும் அமைச்சின் வாழ்வாதார நிதி மூலமும் பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கண்காட்சி மற்றும் ஆய்வரங்குகளையும் இவ்விடயமாக நடாத்தி வருகின்றது. வழிகாட்டும் விளம்பரங்களையும் வெளியிடுகின்றன. சுயஉதவி கோருவோருக்கும் அரசாங்கத்தினால் உதவிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மிகவும் பண்டைக்காலம் தொடக்கம் வடஇலங்கை மக்களிடம் செல்வாக்குப் பெற்று வந்த பனை வளத்தினை நாம் பேணுவதன் ஊடாக எமது பகுதியினர் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப முடியும். நோய்களைத் தடுக்க முடியும். வேலைவாய்ப்புக்களை அவதானிக்க முடியும். எமக்கு கிடைத்துள்ள அரிய பொக்கிசத்தின் மதிப்பினை நாம் உணர வேண்டும். அவ்வகையில்எமதுமுன்னோர்களது தேசிய உணவாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பனை வளத்தினது உணவுகளை நிராகரித்து நவீன உணவுமுறையினை நாடியதன் விளைவே தற்கால சமுதாயத்தவர்கள் எதிர்நோக்கிவருகின்ற புதிய நோய்களாகும்.

**உசாத்துணை நூல்கள்**

**தமிழ்**


*01.* அருந்தவராஜா,க.(2014) "ஒல்லாந்தர் காலத்தேய யாழ்ப்பாணத்தின் பொருளாதாரநிலை", இலங்கை வரலாறு (கி.பி. 1505 - 1796), (ப. ஆ. அருந்தவராஜா,க.), அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

*02.* ஏகநாயகவல்லி,சி. (2003) ஈழவரலாற்றுப் பதிவுகள், அரோவெப் வெளியீடு, கனடா.

*03.* கணபதிப்பிள்ளை,க.(1962) ஈழத்து வாழ்வும் வளமும், பாரதி புத்தக வெளியீடு, யாழ்ப்பாணம்.

*04.* (2006) "யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்", யாழ்ப்பாணம் - மொழியும் வாழ்வும், (மனோன்மணி,ச. இரகுநாதன்,ம.), கோகுலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

*05.* கிருஸ்ணராசா,செ. (2000) இலங்கை வரலாறு, பாகம் - II, பிறைநிலா வெளியீட்டகம். யாழ்ப்பாணம்.

06. குலரத்தினம்,கா.சி (1977) பனைவளம், மில்க்வைற், யாழ்ப்பாணம்.
07. சங்கரன். (1986) மகாவம்சம் (தமிழ் மொழி பெயர்ப்பு), கொழும்பு.
08. சம்பந்தம், கே. (1966) இனிக்கும் பதநீர், சென்னை மாநிலப் பனை வெல்லச் சம்மேளனம், சென்னை.
09. சிவசாமி,வி. (1990) திவகம் - ஒரு வரலாற்று நோக்கு, பதிப்பு உரிமை ஆசிரியர், யாழ்ப்பாணம்.
10. சிவசாமி,வி. (2014) "போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஈழத்தில் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை", இலங்கை வரலாறு (1505 - 1796) கட்டுரைகளின் தொகுப்பு, (ப.ஆ.அருந்தவராஜா.க), அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.
11. சிவலிங்கராஜா,எஸ். (2014 ஒக்ரோபர்) "தமிழ் மக்களது வாழ்வியலிற் பனை", கலைக்கேசரி, வீரகேசரி எக்ஸ்பிரஸ் வெளியீடு, கொழும்பு.
12. நாகசாமி,இரா. (1969) தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள், பாகம். 2, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு.
13. பத்மநாதன்,சி. (2002) இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
14. பத்மநாதன்,சி. (2011) யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
15. பாக்கியநாதன்,மு. (2003) பனையியல், (ப. உ. தவமலர்) யாழ்ப்பாணம்.
16. விசாகருபன்,கி. (2004) நாட்டார் வழக்காற்றியல், மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

**English**

01. Arasaratnam,S. (1958) 'Dutch Sovereignty in Ceylon A Historical Survey of its Problems in Ceylon', Journal of Historical and Social studies. University of Peradeniya, Peradeniya.
02.__________ (1964) The Administration of the Dutch East India Company, New Jersey.
03.__________ (1982) 'Historical foundation of the Colony of the Tamils of North Sri Lanka', Thanthai Chelva Memorial Lecture, Jaffna.
04.__________ (1988) Dutch Power in Ceylon, Navarang, New Delhi.
05. Blatter,E.S.J. (1926) Palms of British India & Ceylon, Oxford University press.
06. Ferguson, Donald. (1998) The Earliest Dutch visits to Ceylon, Asian Educational Services. New Delhi.
07. Gunasinghe,P.A. (2007) The Tamils of Sri Lanka, Cave & Co. Ltd, Colombo.
08. Gunasingam,M. (2008) Tamils in Sri Lanka, M.V.Publications, Sydney.
09. Lubeigt,G. (1977) Le Palmier a sucre, Borassus flaberllifer I.ses different products et la technologic associee en Birmanie J. Agric Trad & Bot.
10. Martyn,H. (1923) Notes of Jaffna, American Ceylon Mission Press, Tellippalai.
11. Pieris,P.E. (1995) Ceylon and the Hollanders, (1658 - 1796),Navrang, Colombo.
12. Sankaralingam,L. (1999) Management of Tuber root in Palmyrah palm, Journal of Mycology and Plant Pathology, TNAU, Tamil Nadu.

**Report**

Dairy of Jan Schreuder, Governor of Ceylon, (1760 July18),Hooge Regeering Van Batavia, 535.

**பத்திரிகைகள்**

*01. ஈழகேசரி வெளியீடுகள், (1930 - 58) திருமகள் அழுத்தகம்,சுன்னாகம்.*

*02. உதயன் வெளியீடு, (1985 - தற்போதுவரை) உதயன் பப்ளிகேசன் பிறைவேற் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.*

*03. வீரகேசரி வாரமலர்; 29.02.2004, ப.29*
*வழுக்கியாற்று வடிநிலம் வழங்கும் வரிவடிவங்கள் செ. கிருஷ்ணராசா*